

# சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி

# போடிநாயக்கனூர்

## பள்ளி காலை வழிபாட்டுக் கூட்டச் செயல்பாடுகள்

**முகக் கவசம், உயிர்கவசம்**

**இன்று பிலவ ஆண்டு, மாசி மாதம் 14ஆம் நாள்**

**2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26 ஆம் நாள் சனிக்கிழமை**

**அதிகாரம் : வாழ்க்கைத் துணைநலம் - குறள் எண் : 55**

### குறள்

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்

பெய்யெனப் பெய்யும் மழை.

### குறள் விளக்கம்

கணவன் வாக்கினைக் கடவுள் வாக்கினை விட மேலானதாகக் கருதி அவனையே தொழுதிடும் மனைவி பெய் என ஆணையிட்டவுடன் அஞ்சி நடுங்கிப் பெய்கின்ற மழையைப் போலத் தன்னை அடிமையாக எண்ணிக் கொள்பவளாவாள். .

### பழமொழி ( Proverb )

***A young calf knows no fear***

**இளங்கன்று பயமறியாது**

### பொன்மொழி

அன்பு அறிவில் இருந்தால் சத்தியம் பிறக்கும், அன்பு மனதில் இருந்தால் கருணை பிறக்கும், அன்பு செயலில் இருந்தால் அஹிம்சை பிறக்கும், அன்பு கல்வியில் இருந்தால் தர்மம் பிறக்கும்.

### இரண்டொழுக்க உறுதி மொழி

1. மனித நேயமே உலகில் மகத்தானது. அனைவரிடத்திலும் அன்பு காட்டுவேன்.
2. கல்வி கற்பதே என் தலையாய கடமை. கடமையை என் கண்ணாய் கருதுவேன்

### இன்றைய பொது அறிவு வினா விடை

1. இரயில் என்ஜினை கண்டுபிடித்தவர்? ஸ்டீபென்சன்
2. பிளாஸ்டிக்கை கண்டுபிடித்தவர்? அலெக்சாண்டர் பார்க்ஸ்

### தினமும் ஆங்கிலம் கற்றுக் கொள்வோம்

Get into groups of four.

**நான்கு குழுக்களாக இருங்கள்**

Who would like to read?

யார் வாசிக்க விரும்புகிறீர்கள்



# சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி
# போடிநாயக்கனூர்

## பள்ளி காலை வழிபாட்டுக் கூட்டச் செயல்பாடுகள்

வரலாற்றில் இன்று :

- குவைத் விடுதலை தினம்(1991)
- 2வது பிரெஞ்ச் குடியரசு அறிவிக்கப்பட்டது(1848)
- டிம் பெர்னேர்ஸ், லீ நெக்சஸ் என்ற உலகின் முதல் இணை உலாவியை அறிமுகப்படுத்தினார் (1991)
- பெய்ரூட்டில் இருந்து அமெரிக்க படைகள் வெளியேறின(1984)

### இன்றைய செய்திகள்

- கொரானா தொற்று படிப்படியாக இந்தியாவில் குறைந்து வருகிறது.
- உக்ரைன் நாட்டில் உயர்கல்வி பயிலும் மாணவர்கள் தமிழ்நாடு திரும்பும் செலவை அரசே ஏற்கும் என தமிழக முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவிப்பு.
- கடந்த 7 ஆண்டு கால பாஜகஆட்சியில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட வேளாண் கடன்இரண்டரை மடங்கு அதிகரித்துள்ளது என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.
- ரஷ்யா-உக்ரைன் விவகாரம்- பாதுகாப்பு அமைச்சரவை குழுவுடன் பிரதமர் மோடி ஆலோசனை
- ரஷ்யா - உக்ரைன் போர் | மிகப்பெரிய பிரச்சினையாக உருவெடுக்கலாம்: ஐ.நா. கூட்டத்தில் இந்தியா அச்சம்
- ஏற்கனவே கைதாகி சிறையில் இருக்கும் முன்னாள் அமைச்சர் திரு.ஜெயக்குமார் மீது மீண்டும் ஒரு வழக்கு பாய்ந்துள்ளது.
- எல்கேஜி, யுகேஜி வகுப்புகளை கைவிட பள்ளிக்கல்வித்துறை திட்டம்.
- ரஷ்ய அதிபருடன் இந்திய பிரதமர் மோடி போரை நிறுத்த வேண்டும் என கேட்டுக்கொணடார். நேர்மையான பேச்சு வார்த்தை மூலமே பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு ஏற்படும் எனவும் வலியுறுத்தல்.